

சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெறும் வாக்குச்சாவடிகளை கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் சென்று ஆய்வு செய்து கழக நிர்வாகிகளிடம் கள நிலவரம் குறித்து கேட்டறிந்தார்.

த.வெ.க. காவல்துறையினரின் அராஜகம்!

நீதி கேட்டு சென்ற பெண்களை வலுகட்டாயமாக தூக்கிச் சென்றனர்!

அரியலூரில் போலீசார் அராஜகம் – பெண்கள் கண்ணீர்!

அரியலூர்,அக்.7-

அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டாட்சியர் அலுவலகம் அருகே, சுப்பிரமணியன் என்பவர் புதிதாக கட்டிவரும் வீட்டில் செப்டிக் டேங்க் அமைக்கப் பட்டு வருகிறது.

அந்த செப்டிக் டேங்க் கட்டுமான சென்ட்ரிங் பலகை அகற்றும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களான திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த பாஸ்கரன், தினகரன் மற்றும் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ராமச்சந்திரன் ஆகிய மூவரும் கடந்த அக்டோபர் 2ம் தேதி மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயக்கமடைந்த நிலையில், தீயணைப்புத் துறையினர் மீட்டு 108 வாகன மூலம் செந்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் தொழிலாளர்கள் மூவரும் ஏற்கனவே உயிரிழந்ததாக தெரிவித்தனர். உயிரிழந்த தொழிலாளர்களின் உடல் பிரேத பரிசோதனைக்காக, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு நேற்று முன்தினம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

இந்த நிலையில் பிரேத பரிசோதனை முடிந்தும் உடலை வாங்க மறுத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் மற்றும் தொழிலாளர்களின் குடும்பத்தினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு மனித கழிவுகளை மனிதனே அகற்ற தடை என்ற சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, ரூ.30 லட்சம் இழப்பீடு மற்றும் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

பேச்சுவார்த்தை 3 நாட்களாக நீடிக்கும் நிலையில் உரிய தீர்வு கிடைக்காததால், நேற்று முன்தினம் மாவட்ட ஆட்சியர் மிருணாளினி மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் செல்வக்குமார் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

வீடு கட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் அனுமதி வழங்கப்பட்டு, தற்போது பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது. மேலும் செப்டிக் டேங்க் புதியதாக கட்டுமானம் செய்யப்பட்டு வரும் போது, அதனை எதனடிப் படையில் மலக்குழி என்று குறிப்பிட்டு வழக்குப்பதிவு செய்ய முடியும்? என்று மாவட்ட நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட நிர்வாகத்தினரின் கருத்தை ஏற்காத மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் உடலை வாங்க மறுத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டத்திற்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சியினர் காவல் துறையை தடுத்தவையும் மீறி ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் உயிரிழந்த தொழிளார்களின் குடும்பத்தினர் மற்றும் பெண்களை கை, கால்களை பிடித்து ஆடு மாடுகளை தூக்கி செல்வதுபோல் தூக்கி சென்றனர், காவல் துறையினர் வலுக்கட்டாயமாக கைது செய்து காவல் துறை வாகனத்தில் ஏற்றி சென்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

த.வெ.க. அரசின் அலட்சிய போக்கை அக் குடும்பத்தினர் கண்டித்தனர்,இதற்காகவா உங்களுக்கு வாக்களித்தோம் என அழுதபடியே சென்றனர்.



அரியலூர் மாவட்டம் செந்துறையில் செப்டிக் டேங்க் செண்ரிங் பலகை பிரித்தபோது மூவர் உயிரிழந்தனர் அவர்களுக்கு நிவாரணம் கேட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்ற அந்த குடும்பத்தினர் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகளை போலிசார் தடுத்து நிறுத்தினர். மீறி உள்ளே சென்றவர்களை காவல்துறையினர் பெண்களை கை, கால்களை பிடித்து தூக்கி சென்று கைது செய்தனர். இதனால் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; 'அண்ணன் சீர்' திட்டத்திலே பலனடையனும்னா, வருஷத்துக்கு இரண்டரை லட்ச ரூபாய் வரை வருமானம் இருக்கணுமாமே! தேர்தல் வாக்குறுதியிலே 'ஐந்து லட்ச ரூபாய் வரை வருமானம் வரும் மகளிர்க்கு' அப்படின்னுதானே த.வெ.க. சொல்லிச்சு.

பட்டணம் : **ஆமாமய்யா; நீ சொல்றது கரெக்ட்தான். எந்த வாக்குறுதியைதான் அவங்க ஒழுங்கா நிறைவேற்றாங்க. மகளிர் உதவித் தொகை ரூபாய் 2500 தருவோம் - அப்படின்னாங்க. தர்றாங்களா, இல்லியே! எல்லாம் அரை குறைதான். பாவம் மக்கள்!**

திருவள்ளூர் அடுத்த மேட்டுப்பாளையத்தில்

த.வெ.க. ஆட்சியில் குடிநீருக்காக வீதியில் இறங்கிய மக்கள்!

காலிக்குடங்களுடன் சாலை மறியல் - 'மனு வழங்கியும் எந்தப் பயனும் இல்லை' என பொதுமக்கள் குமுறல்!

திருவள்ளூர் அக். 07-

குடிநீர் வழங்கத் தவறிய த.வெ.க. அரசைக் கண்டித்து, மேட்டுப்பாளையம் மக்கள் காலிக்குடங்களுடன் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். குடிநீருக்காக மக்கள் போராடும் நிலை ஏற்பட்டுள்ள நிலையில், அரசு பேருந்துகள் சிறைபிடிக்கப் பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

திருவள்ளூர் அடுத்த பூண்டி ஒன்றியம், சென்றான்பாளையம் ஊராட்சிக் குட்பட்ட மேட்டுப்பாளையம் கிராமத்தில் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப் பகுதியில் கடந்த 5 மாதங்களாக குடிநீர் விநியோகம் முறையாக நடைபெற வில்லை என்றும், கடந்த ஒரு வாரமாக குடிநீர் முற்றிலும் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் குற்றம்சாட்டினர்.

குடிநீர் கிடைக்காமல் தவிக்கும் மக்கள், டேங்கர் லாரிகளில் வரும் தண்ணீரை ஒரு குடம் ரூ.10 வரை பணம் கொடுத்து வாங்கிப் பயன்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். அன்றாட கூலியை நம்பி வாழும் குடும்பங்கள், தினமும் பணம் கொடுத்து குடிநீர் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பது வேதனைக்குரியது என்றும் அவர்கள் கூறினர்.

குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகளிடமும், திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் உள்ளிட்டோரிடமும் பல முறை மனுக்கள் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப் படவில்லை என பொதுமக்கள் தெரிவித்தனர்.

அதிகாரிகளிடம் முறையிட்டும் தீர்வு கிடைக்காததால் வேதனையும் ஆத்திரமும் அடைந்த பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டோருடன் காலிக்குடங்களை ஏந்திய படி திருவள்ளூர்- ராமஞ்சேரி சாலையில் மறிய லில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் போது அவ்வழியாக வந்த அரசு பேருந்துகளையும் பொது மக்கள் சிறைபிடித்தனர். இதனால் பேருந்துகளில் பயணம் செய்த பொதுமக்கள், வேலைக்குச் சென்ற தொழிலாளர்கள் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்டனர். குடிநீர் பிரச்சினை காரணமாக பொதுமக்களின் போராட்டம் போக்குவரத்து பாதிக்கும் அளவுக்கு சென்றது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் வரபிரசாத், பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது 10 நாட்களுக்குள் குடிநீர் விநியோகத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததை தொடர்ந்து பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நீலநாராயணன்

அக்டோபர் 7 (1996)



எல்லோராலும் 'நீலம்' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்.

கழக அமைப்புச் செயலாளராகவும் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இரு முறையும் பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் 'பெரியார் விருது' பெற்றவர்.

கழகம் அறிவித்த பல போராட்டங்களில் சிறை சென்றதோடு மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

விடுமுறை முடிந்து சென்னை திரும்பிய மக்கள்!

சென்னை புறநகர்ப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல்!

முக்கியச் சாலைகளில் வாகனங்கள் அணிவகுப்பு!

சென்னை, அக். 7-

மூன்று நாட்கள் தொடர் விடுமுறை முடிந்து, சென்னை திரும்பும் மக்களால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பள்ளி காலாண்டு தேர்வு, காந்தி ஜெயந்தி மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு சென்னையில் இருந்து ஏராளமானோர் தென் மாவட்டங்கள் உள்பட சொந்த ஊர்களுக்கும், சுற்றுலா இடங்களுக்கும் சென்றிருந்தனர். விடுமுறை முடிவடைந்து பள்ளிகள், கல்லூரிகள் திறப்பு மற்றும் பணிக்கு திரும்ப வேண்டியுள்ளதால் நேற்று முன்தினம் மாலை முதல் சென்னை நோக்கி படையெடுக்க தொடங்கினர்.

இதனால் திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வாகன போக்குவரத்து அதிகரித்து, பல இடங்களில் வாகனங்கள் ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டது. குறிப்பாக உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடி அருகே 2 கி.மீ. தொலைவுக்கு வாகனங்கள் அணிவகுத்து சென்றது.

முன்னதாக, விடுமுறை தொடங்கிய போது சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்குச் சென்றவர்களால் தாம்பரம், பெருங்களத்தூர் மற்றும் ஜிஎஸ்டி சாலையில் கடும் நெரிசல் ஏற்பட்டிருந்தது.


தற்போது விடுமுறை முடிந்து அதே அளவுக்கு மக்கள் சென்னை திரும்புவதால் மீண்டும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. சொந்த வாகனங்களில் சென்னை திரும்புவோர் மட்டுமின்றி அரசு மற்றும் தனியார் பேருந்துகள், ரயில்களிலும் பயணிகள் கூட்டம் அதிகரித்தது.

இதன் காரணமாக சென்னை புறநகர் பகுதிகளிலும், நகருக்குள் நுழையும் முக்கிய சாலைகளிலும் இரவு நேரத்திலும் கடும் போக்குவரத்து நெரிசல் நீடித்தது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இரா. துரைராஜன்

அக்டோபர் 7 (2017)



நாகப்பட்டினம் மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

1966ல் வட்டத் தலைவராகவும் – 1972 முதல் 1995 ஆம் ஆண்டு வரையிலான 23 ஆண்டுகள் தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வீடுகட்டும் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வார்டு கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.